முருகப்பெருமான் துணை

**மகான் சூரியானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. அன்னதான சேவை ஆற்றுகின்ற
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   மண்ணுலகில் அற்புதம் நிகழ்த்தவந்த
   மாதவராஜனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
   குறைவிலா தசதிகதி கதிர்வாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் **10** ம் நாள், **25.06.2023**, ஞாயிற்றுக்கிழமை)

   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனுக்கு சூரியானந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான தரும வழிகளை
   ஞான தேசிகன் உலகோர்க்கு காட்ட
   நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே மக்களிடை ஞானிகளின்
   வல்லமையான ஆசிபலம் கிட்டி
   தரும பலம் மக்களிடை பெருகிட
   தரணியில் வளமான சூழல் கனியும்
5. கனியும் ஞானவான்கள் கூடிட
   கருணைமிக்க தலைமைபட
   இனிவரும் காலம் தன்னில்
   இடரின்றி பாதுகாப்புத் தரும்
6. தருகின்ற நல்லோர்கள் ஆட்சி
   தரும ஞான ஆட்சியாக
   வருங்காலம் மாற்றம் காணும்
   வரலாறு காணா தருமசேவை ஆற்றி

7. ஆற்றியே அரங்க மகானின்
அறமும் சன்மார்க்கமும் தானும்
மாற்றத்தின் சக்தியாக வெளிப்பட்டு
மக்களிடையே நம்பிக்கை கூட்டி

8. கூட்டியே அரங்கன் தேடலான
குறைவிலா தொண்டர் படைகள்
வாட்டம் போக்கும் வண்ணம்
வழிமொழிந்து அரங்கன் புகழை

9. புகழை உலகெலாம் கொண்டு
புண்ணிய வழியாக வடிவமைத்து
யுகமாற்றமே செய்து சிறப்பர்
உண்மை நிறைந்த தலைமை

10. தலைமையாக முருகப்பெருமான்
தரணிகாக்க வெளிப்படவே
ஊழலில்லா மக்களை காக்கும்
உயர் ஆட்சியாக மாற்றம்

11. மாற்றம் நடத்தி உலகினில்
மாபாதகம் எல்லாம் விலகிட
ஆற்றல்பட தெய்வ ஞான ஆட்சி
அரங்க ஞானி அவதாரத்தால் மலரும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–